ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2424/49 - 2025 පෙබරවාරි මස 19 වැනි බදාදා - 2025.02.19

2424/49 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர் இல.: HAK/ LAN/ 1/ 19.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், ஹக்மண பிரதேச செயலாளர் பிரிவின் முருதமுரே மேற்கு கிராம அலுவலர் பிரிவில், இல. 293 B, முருதமுரே மேற்கு கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தறை மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ள கடெஸ்டர் வரைபட இல. 820398, தொகுதி இல. 03, பத்திர இல. 1 இல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு களின் விபரங்கள்:

1. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: கமகெய்திவெலே மெத இரிகொந்த மற்றும் கொடஇரிகொந்த; உரிமை கோருவோர்: ஹேவா வலிமுனிகே நிஹால் பிரேம குமார, இல. 347/1, பொலிஸ் வீதி, ஹக்மன; விஸ்தீரணம்: 0.0304 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹக்மன பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற் கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தீக்ஷண திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
ஹக்மண.

பிரதேச செயலகம்,
ஹக்மண,
2025, பெப்புருவரி 07.

EOG 02 - 0179

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர் இல.: WEG/LAN/L8/ACQ/60.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகாமம் பிரதேச செயலாளர் பிரிவில் இல. 399A நிதங்கல கிராம அலுவலர் பிரிவில் வரக்கபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள, க. சி. இல. 820075 முன் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளை நிதங்கல கிராம அலுவலர் பிரிவில் சேவா பியச ஒன்றை அமைப்பதற்காக எடுத்துக்கொள்ள அவசியம் ஏற்பட்டுள்ளது.

1. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: நிதங்கல கொளணி; உரிமை கோருவோர்: விதானகே வில்லியம்; விஸ்தீரணம்: 0.0506 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வெலிகாமம் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டீ. எல். என். எஸ். மெண்டிஸ்,
பிரதேச செயலாளர்,
வெலிகாமம்.

பிரதேச செயலகம்,
வெலிகாமம்,
2025, பெப்புருவரி 17.

EOG 02 - 0180

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.